I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.75/2024                    நாள் : 13.08.2026</u>

<u>பி.சா.2– திரு.மகபூப் பாட்ஷா.</u>

**குறுக்கு விசாரணை :–**

பிரதிவாதியை எனக்குத் தெரியாது. என்னுடன் சாட்சி கையொப்பமிட்ட அருண்வேல் என்பவரை எனக்கு தெரியாது என்றால் அவரை பார்த்திருக்கிறேன். முதன் முதலாக மேற்படி அருண்வேலை வாதிகள் கடையில்தான் பார்த்தேன். புரோ நோட்டை பிரதிவாதிதான் 100 ரூபாய் முத்திரைத்தாளில் எழுதிக் கொண்டு வந்தார். அதை தட்டச்சு செய்து கொண்டு வந்தார். எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. புரோ நோட்டில் என்ன தட்டச்சு செய்யப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியும். வாதிகள் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும்போது கடையில் வாதிகளும், மேற்படி அருண்வேலும், நானும், பிரதிவாதியும் இருந்தோம். வாதிகள் புரோ நோட்டில் எத்தனை இடத்தில் கையொப்பமிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் கையொப்பமிட்டார்கள். சாட்சி கையொப்பமிட 1ம் வாதி அழைக்கும்போது நான் துறைமுகத்தில் இருந்தேன். 1ம் வாதி எனக்கு கைபேசி மூலம் அழைப்பு விடுக்கும்போது பகல் 3 மணியிருக்கும். என் கைபேசி எண் 9842132645 ஆகும். மேற்படி கைபேசி அழைப்பு பட்டியலை பார்த்தால் 1ம் வாதி என்னை அழைத்தாரா என்பது தெரியும் என்றால் சரிதான். 1ம் வாதியின் கடைக்குத்தான் சென்றேன். நான் கடைக்கு போவதற்கு முன்பாகவே 1ம் வாதியும், சாட்சிகளும் புரோ நோட்டில் கையொப்பமிட்டிருந்தார்களா என்றால் இல்லை. நான் கையொப்பமிடுவதற்கு முன்பாகவே புரோ நோட்டில் பிரதிவாதி கையொப்பமிட்டார். புரோ நோட்டில் என் கையொப்பத்திற்கு கீழ்

பிரதிவாதியின் கையொப்பம் உள்ளது. வா.சா.ஆ1ல் 07.01.2023 அன்று ரூ.4,50,000/-ம் வங்கி மூலமாக வாதி பிரதிவாதிக்கு அனுப்பியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியிடம் 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார்கள். ரூபாய் 9 லட்சம் கொடுத்தார்கள். நான் எண்ணி பார்க்கவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் பிரதிவாதி மேற்படி கடைக்கு வரவில்லை என்றும், வாதிகளிடமிருந்து எந்தவித பணமும் பெறவில்லை என்றும், நாங்களும் அதில் கையொப்பமிடவில்லை என்றும், பிரதிவாதியும் கையொப்பமிடவில்லை என்றும், 07.01.2023 அன்று ரூபாய் 4 லட்சத்தை வாதிகளின் வங்கி கணக்கிலிருந்து பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பாமலேயே மேற்படி தொகையையும் சேர்த்து வா.சா.ஆ1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்திருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளின் வற்புறுத்தலின்பேரில் ராமசுப்பிரமணியன் என்பவர் வாங்கிய கடனுக்காக பிரதிவாதி நிரப்பப்படாத 100 ரூபாய் முத்திரைத்தாளில் கையொப்பம் மட்டும் போட்டுக் கொடுத்தார் என்றும், அதை வாதிகள் பெற்று பூர்த்தி செய்து பிரதிவாதிமீது தவறான வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் வாதி என் நண்பர் என்பதால் என்னை பயன்படுத்தி மோசடியான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் வாதி என் நண்பர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.